பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 03 புதன்கிழமை 20.10.2021 கதிர் 212

## மேலும் 71 பேர் சிக்கினார்கள்!

தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் கடந்த 24 மணித்தியாலங்களில் 71 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் இன்று காலை விடுத்துள்ள செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

☞ 2

### கடற்படையினரின் படகு மோதி

## யாழ். கடலில் காணாமல்போன தமிழக மீனவர் சடலமாக மீட்பு!



(ந.லோகதயாளன்)


யாழ்., காரைநகர் – கோவிலம் கடற்பகுதியில் ஏற்பட்ட படகு விபத்தையடுத்து, கடலில் மூழ்கி காணாமல்போயிருந்த தமிழக மீனவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

யாழ். காரைநகர் கடற்பகுதியிலிருந்து இன்று காலை குறித்த மீனவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த நபர் தமிழகத்தின், கோட்டைப்பட்டினம் பகுதியைச் சேர்ந்த ராஜ்கிரன் என்ற மீனவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காரைநகர் – கோவிலம் கடற்பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இந்திய மீனவர்கள் சிலர் சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்டனர்.

☞ 2



## மோடி – நாமல் சந்திப்பு

இந்தியாவின் உத்தரபிரதேச மாநிலத்தில் சர்வதேச விமான நிலையமாக மாற்றப்பட்டுள்ள குஷிநகர் விமான நிலையம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியால் இன்று திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்து கொள்வதற்காகச் சென்றிருந்த விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, இந்தியப்பிரதமர் மோடியைச் சந்தித்து கலந்துரை

☞ 2

# மாகாணங்களுக்கு இடையிலான பயணத் தடை ஒக். 31 வரை நீடிப்பு

### கொரோனாத் தடுப்புச் செயலணி அறிவிப்பு



இலங்கையில் மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாட்டை மேலும் 10 நாள்களுக்கு நீடிப்பதற்குக் கொரோனாத் தடுப்புச் செயலணி தீர்மானித்துள்ளது.

இதன்படி ஒக்ரோபர் 31 ஆம் திகதி வரையில் மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடு தொடரும் என்று கொரோனாத் தடுப்புச் செயலணியின் பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா இன்று அறிவித்துள்ளார்.

☞ 2

## குஷி விமான நிலையத்தில் முதலில் தரையிறங்கிய இலங்கை விமானம்




இந்தியாவின் உத்தரபிரதேச மாநிலம் குஷி நகரில் அமைக்கப்பட்ட சர்வதேச விமான நிலையத்தின் திறப்பு விழாவில் இன்று முதல் விமானமாக இலங்கை விமானம் தரையிறங்கியது.

இலங்கையில் இருந்து அமைச்சர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட அரச பிரதிநிதிகள் குழுவினரும் 100

☞ 2

## வடமராட்சி கிழக்கில் பொலிஸாருடன் இணைந்தே சட்டவிரோத மணல் அகழ்வு

### சுமந்திரன் எம்.பி. பகீர் குற்றச்சாட்டு

(இ.கலையமுதன், ந.லோகதயாளன்)



வடமராட்சி கிழக்கில் பொலிஸாருடன் இணைந்தே சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்று வருகின்றது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன்

☞ 2



## சண்டிலிப்பாயில் கைத்துப்பாக்கி

(இ.கலையமுதன்)

யாழ்., சண்டிலிப்பாய் சந்திப் பகுதியில் உள்ள காணியைத் துப்புரவு செய்தபோது

☞ 2

## அதிபர், ஆசிரியர்கள் நாளையும் மறுதினமும் பணிப்பகிஷ்கரிப்பு



(இ.கலையமுதன்)

நாளையும் (21ஆம் திகதி), நாளைமறுதினமும் (22ஆம் திகதி) அதிபர்கள், ஆசிரியர்கள் பணிக்குச் செல்லாமல் பகிஷ்கரிப்புப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.

☞ 2

## யாழ். மாநகர சபையின் செயற்பாடுகள் விரைவில் கணினி மயப்படுத்தப்படும்

### மேயர் மணிவண்ணன் நம்பிக்கை



(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம் மாநகர சபையின் செயற்பாடுகள் அனைத்தும் விரைவில் கணினிமயப்படுத்தப்படும் என்று யாழ். மாநகர

☞ 2

## குஷி விமான ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பௌத்த பிக்குகளும் இந்த விமானத்தில் பயணித்தனர்.

பௌத்தர்களின் புனித நகரில் திறக்கப்பட்ட சர்வதேச விமான தளத்தில், இலங்கை விமானம் முதலாவதாக தரையிறங்கியமை வரலாற்று சிறப்புமிக்க சந்தர்ப்பமாகும்.

மஹாசங்கத்தினரின் ஆசீர்வாதத்துடன் வஸ்கடுவ கபிலவஸ்து புனித சின்னங்கள் சகிதம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பயணம் ஆரம்பமாகியதாக இந்தியத் தூதரகம் தெரிவித்தது.

குஷி நகர் விமான நிலையம் ரூபா 260 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது. புத்தபிரான் மகாபரிநிர்வாண நிலையை அடைந்த இடத்தைப் பார்வையிட வரும் உள்நாட்டு மற்றும் சர்வதேச யாத்திரிகர்களுக்கு வசதியாக இது அமைவதுடன், உலகெங்கும் உள்ள புத்தரின் யாத்திரைத் தலங்களை இணைக்கும் வகையிலும் செயற்படும் என்று கூறப்பட்டது.

## வடமராட்சி .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குற்றஞ்சாட்டினார்.

மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறும் இடங்களுக்கு இன்று நேரடியாகச் சென்று பார்வையிட்ட பின்னர் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நீண்ட நாள்களாக சட்டவிரோதமான மணல் கொள்ளை இந்தப் பகுதிகளில் இடம்பெற்று வருகின்றது. குறிப்பாக நான் ஒரு முறை எனது வாகனத்தில் வரும்போது கடத்தல்காரர்கள் என்னைக் கண்டதும் தமது வாகனத்தை திருப்பிக் கொண்டு சென்றதை நேரடியாகக் கண்டேன்.

அதேபோல் இப்பகுதி மக்கள் மிகவும் அச்சம் அடைந்துள்ளார்கள். அதாவது சட்டவிரோத மணல் அகழ்வு தனியார் காணிகளில் இடம்பெற்று வருகின்றது.

சட்டவிரோதமாக மணல் அகழ்வு தொடர்பில் பொலிஸாரிடம் தகவல் வழங்கும்போது அவர்கள் நடவடிக்கை எடுப்பதாகக் கூறுகிறார்கள். ஆனால், அவ்வாறு முறையிடும்போது மணல் கடத்தல்காரர்களிடமிருந்து பொலிஸாரிடம் முறையிட்டவர்களுக்கு தொலைபேசி அழைப்பு வருகின்றது. எனவே, பொலிஸாருடன் இணைந்து இந்தச் சட்டவிரோத மணல் கொள்ளை ஈடுபடுவது என்பது நிரூபணமாகின்றது.

எனவே, குறித்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார்.

## மேலும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கமைவாக தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை 81 ஆயிரத்து 311 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் மேல் மாகாணத்துக்கு உள்நுழையும் மற்றும் வெளியேறும் பிரதேசங்களில் நேற்று மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறி 345 வாகனங்களில் வந்த 618 பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

## யாழ். கடலில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனை அப்பகுதியில் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த இலங்கைக் கடற்படையினர் அவதானித்திருந்த நிலையில், இலங்கை கடற்பகுதிக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீன்பிடிப் படகை சுற்றிவளைக்க முயன்றுள்ளனர்.

அதன்போது, கடற்படையினரின் கண்காணிப்புப் படகு மோதியதில் மீனவர்களின் விசைப் படகு கடலில் மூழ்கியது எனக் கடற்படையினர் தெரிவித்தனர்.

இவ்விபத்தில் படகிலிருந்த மூன்று மீனவர்களும் கடலில் மூழ்கியிருந்த நிலையில் அவர்களில் இருவர் கடற்படையினரால் மீட்கப்பட்டமையுடன், மற்றைய நபர் காணாமல்போயிருந்தார்.

இந்நிலையில், நீரில் மூழ்கி காணாமல்போன மீனவரை கண்டுபிடிக்க கடற்படையினர் தொடர்ந்தும் தேடுதல் நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்த நிலையில், இன்று காலை அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

## மோடி - நாமல் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாடினார்.

இதன்போது, சிங்களத்துக்கு மொழிபெயர்க்கப்பட்ட பகவத்கீதையின் முதல் பிரதியை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, பிரதமர் மோடிக்குப் பரிசளித்தார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அறிவுறுத்தலுக்கு அமைவாக, புத்தசாசன, சமய, மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கும் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் பகவத்கீதை நூல் மொழிபெயர்ப்பு செய்து மீள் பதிப்பு செய்யப்பட்டது.

பகவத்கீதையின் பெருமையை இலங்கை வாழ் இந்துக்கள் மட்டுமல்லாது, சகல மதத்தவர்களும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கில் இந்த நூல் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது எனப் பிரதமரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, பகவத்கீதையில் அமைந்த சமஸ்கிருத சுலோகங்கள், சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் அறியும் வண்ணம் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

## யாழ். மாநகர ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபை மேயர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

யாழ். மாநகர சபையின் உத்தியோக பூர்வ இணையத்தள அங்குரார்ப்பண நிகழ்வு இன்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது நாம் கணினி உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அந்தவகையிலேயே யாழ். மாநகர சபையின் செயற்பாடுகளை முற்றுமுழுதாக இணையவழி மூலம் கணணிமயப்படுத்த வேண்டும் என்பது என்னுடைய இலக்கு.

அந்த இலக்கை நோக்கிய பயணத்தின் மிகக் காத்திரமான பணியின் ஒரு பகுதியை இன்று நாங்கள் அடைந்துள்ளோம். அத்துடன் எதிர்காலத்தில் யாழ். மாநகர சபையின் செயற்பாடுகள் அனைத்தும் இலத்திரனியல் மயப்படுத்தப்பட்டு இணையத்தின் ஊடாக பொதுமக்கள் தமது சேவையை வீட்டில் இருந்தே பெற்றுக்கொள்ளக்கூடியவாறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். அதற்குரிய வேலைத்திட்டங்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள இணையத்தளமானது பொதுமக்கள் தமக்குரிய சேவைகளை வீடுகளில் இருந்தவாறே இணையத்தினூடாக முழுமையாகப் பெற்றுக்கொள்ள கூடிய வாறாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, தமது பதவிக் காலம் விரைவில் முடிந்து விட்டாலும் எதிர்வரும் காலத்தில் இந்த மாநகர சபையைப் பொறுப்பேற்கும் நிர்வாகமானது முழுமையாக இணையமயமாக்கப்பட்ட மாநகர சபையாகப் பொறுப்பேற்கும் - என்றார்.

## சண்டிலிப்பாயில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதில் இருந்து பழுதடைந்த நிலையில் கைத்துப்பாக்கி ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் காணி உரிமையாளரால் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

இதையடுத்து குறித்த இடத்துக்கு வந்த மானிப்பாய் பொலிஸ் அதிகாரி விசாரணைகளை மேற்கொண்டதோடு குறித்த கைத்துப்பாக்கியையும் எடுத்துச் சென்றனர்.

மேலதிக விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## அதிபர், ஆசிரியர் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உப தலைவர் தீபன்தீலீசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இன்று மதியம் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசியல்வாதிகளுடனும் அரசோடு சேர்ந்து இயங்குகின்ற ஒரு சில அமைப்புகளும் சங்கங்களும் 21ஆம் திகதி (நாளை) பாடசாலைக்குச் செல்வதென அறிவித்திருந்தாலும் அதிபர்களும், ஆசிரியர்களும் எங்கள் உரிமைக்காக சேவையைப் புறக்கணித்து போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம்.

அந்தவகையிலே நாளையும் நாளைமறுதினமும் அதிபர்கள், ஆசிரியர்கள் விடுமுறையை அறிவிக்காமல் எந்தவித முன்னறிவிப்பும் இன்றி எந்த வித அச்சமுமின்றி இந்தப் போராட்டத்தில் பங்கேற்க வேண்டும்.

கடமைக்கு சமூகமளிக்காவிடின் சம்பளத்தை நிறுத்துவோமென கூறினாலும் அவற்றை சட்ட ரீதியாக செயற்படுத்த முடியாது என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம்.

சேவைப் புறக்கணிப்பு நடைபெறும் போது அதனால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பாக எந்த சிவில் நீதிமன்றத்திலும் வழக்குத் தொடர முடியாது என்ற சட்ட ஏற்பாடு காணப்படுகின்றது.

அரசு, ஆசிரியர் அதிபர்களோடு தொடர்புபடாத யாரை வைத்து பாடசாலைகளை ஆரம்பித்தாலும் பாடசாலைக்குச் செல்லாத இடத்தில் எந்த விதமான பாதிப்புக்களும் ஆசிரியர்கள், அதிபர்களுக்கு ஏற்படப் போவதில்லை என்பதை நாங்கள் பொறுப்புடன் கூறிக்கொள்கிறோம்.

இந்த இடத்திலேயே 21ஆம், 22ஆம் திகதிகளில் சேவைப் புறக்கணிப்பை மேற்கொண்டு 25ஆம் திகதி நாங்கள் பாடசாலைக்கு செல்ல தயாராகவுள்ளோம்.

அரசு பல்வேறு விதமான கபட நாடகங்களை மேற்கொண்டு அதிபர்கள், ஆசிரியர்களுக்கு எதிராக சமூகத்தை திருப்பும் வகையிலே ஏற்படுவதை நீங்கள் அறிவீர்கள்.

இந்த அரசு, பெற்றோர் மாணவர்கள் உடன் அதிபர்கள், ஆசிரியர்களை மோத விட்டு பிரச்சினையை திசை திருப்பலாம் என்று சிந்திக்கும் நிலையில் தொழிற்சங்க ரீதியாக நாங்கள் முடிவு எடுத்து அரசு அறிவித்த திகதிகளில் பாடசாலைக்குச் செல்லாமல் மாணவர்களின் கல்வியை வழங்கும் நோக்கில் எங்கள் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் 25 ஆம் திகதி பணிக்குச் செல்வோம்.

21ஆம், 22ஆம் திகதிகளில் மாணவர்களை பாடசாலைக்கு செல்வது எந்த விதத்திலும் பாதுகாப்பானதாக இருக்காது. 25ஆம் திகதி நாங்களாக பாடசாலைக்கு வரும்போது உங்கள் பிள்ளைகளை அனுப்புங்கள். நாங்கள் பிள்ளைகளுக்கு கற்பித்தல் செயற்பாடுகளை செய்யத் தயாராக இருக்கின்றோம் - என்றார்.

## மாகாணங்களுக்கு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் வகையில், கடந்த ஓகஸ்ட் 21ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்பட்டிருந்த தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் ஒக்ரோபர் முதலாம் திகதியுடன் தளர்த்தப்பட்டது.

எனினும், தொற்று அச்சுறுத்தல் தொடர்வதால், மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாட்டை ஒக்ரோபர் 21ஆம் திகதி வரையில் தொடர்வதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எனினும், தற்போதைய நிலைமையைக் கருத்தில்கொண்டு அதனை இம் மாத இறுதி வரையில் நீடிப்பதற்குக் கொரோனாத் தடுப்பு செயலணி தீர்மானித்துள்ளது.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தேர்தலுக்கு அஞ்சும் ஆளும் தரப்பு

'குளம் வற்றும் என்று காத்திருந்து உடல் வற்றி செத்ததாம் கொக்கு' என்பார்கள். மாகாணசபைத் தேர்தலை எதிர்பார்த்திருக்கும் மக்களின் நிலைமையும் இப்படித்தான் ஆகப்போகின்றது போலும். மாகாண சபைகளுக்கான புதிய தேர்தல் முறைச் சட்டங்களை கொண்டு வந்துதான் தேர்தலை நடத்த முடியும். ஒன்றில் புதிய தேர்தல் சட்டத்தை கொண்டு வரவேண்டும். அல்லது பழைய சட்டத்தை மீளப் புதுப்பிக்க வேண்டும். இரண்டையும் செய்யாமல் காலத்தை இழுத்தடித்து வருகின்றார்கள் நாடாளுமன்றத்தை அலங்கரித்துப் பதவி சுகம் அனுபவித்து வரும் நமது அரசியல் பிரதிநிதிகள் – பிரகிருதிகள்.

எதிரணியில் இருக்கும் போது விழுந்து விழுந்து மாகாணசபைத் தேர்தல்களை வற்புறுத்துவார்கள். ஆளும் தரப்புக்கு வந்ததும் போக்கு மாறிவிடும். இது தென்னிலங்கைச் சிங்களப் பிரதிநிதிகளின் போக்கு மட்டுமல்ல, வடக்கு – கிழக்கு தமிழ்ப் பிரதிநிதிகளின் நிலைப்பாடும் இதுதான். அவர்கள் இதில் விதிவிலக்கல்லர்.

பிரதமர் ரணிலின் நல்லாட்சி அரசிலும் இதுதான் நடந்தது. ஆட்சித் தரப்பில் இருப்போருக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்தி, மக்களுக்கு முகம் கொடுக்க அச்சம். அதனால் தேர்தல் முறைகளை மாற்றுகிறோம் என்று சொல்லி, தேர்தல் நடத்தும் கட்டாயத்தை இல்லாது ஒழித்தது நல்லாட்சி அரசு. தமிழ்த் தரப்பினர் – தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் – அத்தருணத்தில் ஆளும் கட்சிக்கு முண்டு கொடுத்து, ஆளுங்கட்சியினராகவே இருந்தனர். ரணிலின் ஐக்கிய தேசியக் கட்சியும், அவரின் நல்லாட்சி அரசும் மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் ஒரேயடியாக முறியடிக்கும் திட்டத்துக்கு நாடாளுமன்றத்தில் துணை போயினர் கூட்டமைப்பினர்.

அச்சமயத்தில் மாகாணசபைத் தேர்தலை நடத்தும் படி வலியுறுத்தி, பிடிவாதம் பிடித்து, ஒற்றைக்காலில் நின்றனர் மொட்டுக் கட்சியினர்.

இப்போது நிலைமை மாறிவிட்டது. மொட்டுக் கட்சியினர் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் அதிகாரத்துக்கு வந்து விட்டனர். கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவியேற்று இரண்டு வருடங்கள் பூர்த்தியாகின்றன. ஆனால் மாகாணசபைத் தேர்தலை நடத்த எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை.

நல்லாட்சி அரசில் இடம்பெற்று, மாகாணசபைத் தேர்தல் முறைமையையே நடத்த முடியாமல் நிலையான தடையை வெற்றிகரமாகப் போட்டவர்கள், இப்போது எதிரணியில் இருந்துகொண்டு அந்தத் தேர்தலை நடத்துங்கள் என்கிறார்கள். அப்போது அப்படி தேர்தலுக்கு நிரந்தர முட்டுக்கட்டை போடும் சட்ட ஏற்பாட்டை கொண்டுவருவதற்கு முழு அளவில் ஒத்துழைத்து, முண்டு கொடுத்து, அந்த வரலாற்றுத் தவறுக்கு துணை போன தமிழ் கூட்டமைப்பினரும் இப்போது மாகாணசபைத் தேர்தலை நடத்துங்கள் என்று குதியாய்க் குதிக்கின்றார்கள்.

ஆளும் தரப்பு நினைத்தால் அடுத்த மூன்று மாதங்களுக்குள் தங்குதடையின்றி புதிய சட்டங்களையும் கொண்டு வந்து, மாகாணசபைத் தேர்தல்களையும் நடத்தி முடித்துவிட இயலும். தீர்க்கமான முடிவு இருந்தால் சுலபமான வழி – மார்க்கம் – தாராளமாக உண்டு.

நாடாளுமன்றத் தேர்தல் முறைமையையும் கூட சீர்திருத்த வேண்டும் என்ற முடிவு எடுத்து பத்து ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. மூன்று நாடாளுமன்றங்களில் அது பற்றிய விடயங்கள் தொடர்ந்து ஆராயப்பட்டு வருகின்றன. அதற்கான முயற்சிகள் அவ்வப்போது நடக்கின்றன. ஆனால் அதற்காக இருக்கும் சட்டத்தை இல்லாமல் ஆக்குவதோ, புதிய இணக்கப்பாடு ஏற்படும்வரை நாடாளுமன்றத் தேர்தலை நடத்தாமல் நிறுத்தவோ இல்லை. அதுபோலதான் மாகாணசபைத் தேர்தல்களையும் புதிய தேர்தல் சீர்திருத்தம் வந்துதான் – அதன் கீழ்தான் – நடத்த வேண்டும் என்பது அல்ல. காலம் இழுபடும் அந்த வேலை தன்பாட்டில் தொடரட்டும். மறு பக்கத்தில் – இருக்கும் அல்லது இருந்த –சட்டத்தின் கீழ் மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்பட்டு, மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டு, விடயங்கள் ஒப்பேறட்டும்.

தேர்தல் சீர்திருத்தத்துக்கான இணக்கமும் ஏற்பட்டு, அந்த முயற்சி பலிக்கும் போது அந்த வகையில் தேர்தலை நடத்தலாம். அதை விட்டுவிட்டு வராத – இப்போதைக்கு வரும் என்று நம்பிக்கை தராத – ஓர் உத்தேச புதிய சட்டத்தைக் காட்டி, அதுவரை மாகாணசபைத் தேர்தலை நடத்தாமல் இருப்பது என்பது மக்களின் இறைமையை மூழ்கடிக்கும் அபத்த நடவடிக்கையாகும்.

# மீண்டும் கொரோனாத் தொற்று வவுனியாவில் பரவும் அபாயம்!

## சுகாதாரப் பிரிவினர் எச்சரிக்கை



வவுனியா நகரசபை விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும் கிரிக்கெட் மற்றும் கால்பந்தாட்ட போட்டிகளினால் கொவிட் தொற்று பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக சுகாதாரப்பிரிவினர் எச்சரிக்கைவிடுத்துள்ளனர்.

வவுனியா பிரதேச செயலகத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் கு.திலீபன் தலைமையில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

கொவிட் –19 சூழ்நிலை காரணமாக விளையாட்டு நிகழ்வுகள் உட்பட பல விடயங்களுக்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. தவிர்க்க முடியாத சில காரணங்களால் விளையாட்டு வீரர்கள் முகக்கவசமின்றியே விளையாட்டில் ஈடுபடுகின்றனர். இவர்களில் எத்தனை விளையாட்டு வீரர்கள் இரண்டு தடுப்பூசியையும் பெற்றுக்கொண்டனர் என்ற விவரம் கூடத் தெரியவில்லை.

மேலும் பார்வையாளர்களும் அப்பகுதியில் குழுமி காணப்படுகின்றனர். இந்த விடயங்கள் காரணமாக கொவிட் –19 தொற்று பரவும் அபாய நிலை காணப்படுகின்றது. சுகாதாரப் பிரிவினரின் அனுமதியின்றி வவுனியா நகரசபை விளையாட்டு மைதானத்தில் கிரிக்கெட் மற்றும் கால்பந்தாட்ட சுற்றுப்போட்டிகள் இடம்பெறுகின்றன.

நகரசபை மைதானத்தினை சூழ சுகாதார நடைமுறைகளை மீறி பார்வையாளர்கள் ஒன்று கூடி நிற்கின்றனர். மேலும் விளையாட்டுக் கழகங்கள் என பலரும் மைதானத்தினுள் பார்வையாளர்களாக அமர்ந்துள்ளனர்.

எனவே நகரசபையினர் சுகாதார விதிமுறைகளை மீறிச் செயற்பட்டால் சட்ட நடவடிக்கைக்கு செல்ல வேண்டிய நிலை உருவாகும் என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

இதனையடுத்து, பொலிஸாரின் உதவியுடன் நகரசபையினர் பார்வையாளர்கள் ஒன்று கூடுவதைத் தவிர்க்க வேண்டும் எனவும், இனிவரும் காலங்களில் எந்தவொரு விளையாட்டு நிகழ்வும் சுகாதாரப் பிரிவினரின் அனுமதியுடனே இடம்பெற வேண்டுமெனவும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரால் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.

இதேவேளை, வவுனியா மாவட்டத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி பாடசாலைகளை மீள திறப்பது மற்றும் பாடசாலைகளின் சுகாதார நிலைமை தொடர்பாக கலந்துரையாடலில் ஆராயப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் நடைமுறையிலுள்ள கொவிட் சூழ்நிலையில் பாடசாலைகளைச் சுகாதார வழிமுறைகளுக்கமைவாக ஆரம்பிப்பதற்கேற்ற பிரத்தியேகமான செயற்பாடுகள் தொடர்பான விடயங்கள் ஆராயப்பட்டமையுடன், நாடுதழுவியரீதியில் பாடசாலைகளைப் பாதுகாப்பான முறையில் ஆரம்பிப்பது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள விசேட சுற்றுநிருபத்தின் அடிப்படையில் சுகாதாரப் பிரிவினரின் ஆலோசனைக்கு அமைவாக ஆரம்பிப்பது தொடர்பாகவும், வெளி மாவட்ட ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் கடமைக்குத் திரும்புவது மற்றும் அவர்களுக்குரிய போக்குவரத்து வசதி, தங்குமிடம் என்பன தொடர்பாகவும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

# ஜனாதிபதியின் உருவப் படம் மீது அநுராதபுரத்தில் தாக்குதல்

அநுராதபுரம் – பதவியா பகுதியில் நடைபெற்ற போராட்டத்தின் போது, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் உருவப்படம் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. விவசாயம் செய்வதற்கு இரசாயன உரங்கள் கோரி அநுராதபுரத்தில் பதவியா பகுதியில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன்போதே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் உருவப்படம் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக அந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது. இதேவேளை, அம்பாறையில் நாமல்கம பகுதியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது, ஜனாதிபதி உடையணிந்த வந்த ஒருவர் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

# திருமண நிகழ்வில் கலந்துகொண்ட 19 பேருக்கு குளியாப்பிட்டியில் கொவிட்

குருநாகல் மாவட்டம், குளியாப்பிட்டி பிரதேசத்தில் இடம்பெற்ற திருமண நிகழ்வொன்றில் பங்கேற்ற 35 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 19 பேருக்கு கொவிட் வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை குளியாப்பிட்டி பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் தெரிவித்துள்ளது.

குளியாப்பிட்டி, கரகஹகெதர பிரதேசத்திலுள்ள மண்டபமொன்றில் இந்தத் திருமண நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் பங்கேற்ற அனைவரும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். இதன்போதே 19 பேருக்கு கொவிட் வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கொவிட் வைரஸ் தொற்று முற்றாக நீங்கிவிட்டது என்று நினைத்து மக்கள் செயற்படுகின்றமையால் மீண்டும் கொவிட் வைரஸ் தொற்றுப் பரவல் அதிகரிக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது என குளியாப்பிட்டி பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி உத்பல சங்கப்ப தெரிவித்துள்ளார்.

# புதிய ஏவுகணை சோதனை வெற்றி ; வடகொரியா அறிவிப்பு



நீர்மூழ்கிக் கப்பலிலிருந்து ஏவப்பட்ட தமது புதிய ஏவுகணை சோதனை வெற்றியளித்துள்ளதாக வடகொரியா அறிவித்துள்ளது.

வட கொரியா சமீபத்திய வாரங்களில் ஹைப்பர்சொனிக் மற்றும் நீண்ட தூரம் செல்லும் ஏவுகணை என பலவிதமான ஆயுத சோதனைகளை நடத்தி வருகின்றது.

ஜப்பான் கடல் என்றும் அழைக்கப்படும் கிழக்கு கடலில் மற்றுமொரு ஏவுகணை சோதனையை வடகொரியா மேற்கொண்டதாக தென்கொரியா நேற்று குற்றம் சாட்டியிருந்தது.

இதனை உறுதிப்படுத்தும் வகையில் இன்று முக்கிய அறிவிப்பு ஒன்றினை வெளியிட்டுள்ள வடகொரியா, குறித்த ஏவுகணை புதிய தொழில்நுட்பத்தைக் கொண்டது என தெரிவித்துள்ளது.

மேலும் இந்த ஏவுகணை கடந்த வாரம் வடகொரியாவில் நடந்த பாதுகாப்பு கண்காட்சியில் காட்சிக்கு வைக்கப்பட்ட பல புதிய ஆயுதங்களில் ஒன்றாகும் என்றும் வடகொரியா அறிவித்துள்ளது. ஏவுகணைகள் மற்றும் அணு ஆயுதங்களை சோதனை செய்வதை ஐ.நா. தடை செய்துள்ள நிலையில் வடகொரியா தொடர்ந்தும் சோதனையை நடத்தி உலகநாடுகளை எச்சரித்து வருகின்றது.

## ஆப்கானிஸ்தானின் நீண்டகால வளர்ச்சிக்கு பாலின சமத்துவம் அவசியம் என்கிறது ஐ.நா.

ஆப்கானிஸ்தானின் நீண்டகால வளர்ச்சி மற்றும் நீடித்த அமைதிக்கு பாலின சமத்துவம் முக்கியம் என காபூலில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பெண்கள் விவகாரம் தொடர்பான பிரதிநிதி அலிசன் டேவிடியன் தெரிவித்துள்ளார்.

ஆசிரியர்கள் மற்றும் மருத்துவர்களைத் தவிர ஏனைய பெண்கள் வேலைக்கு செல்ல முடியாத நிலை ஆப்கானிஸ்தானில் ஏற்பட்டுள்ளது. அத்தோடு மேல்நிலை, உயர்நிலைப் பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்குச் செல்ல பெண்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளமை கவலைக்குரிய விடயம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தலிபான்கள் அரசாங்கத்தில் ஆண்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ள அதேநேரம் பெண்களுக்கான அமைச்சுக்கள் உட்பட அனைத்தும் இல்லாதொழிக்கப்பட்டுள்ளன.

சில மாகாணங்களில் பெண்கள் வேலை செய்வதற்கும் வீடுகளை விட்டு வெளியேறவும் அனுமதிக்கப்படாத நிலையில் பெண்களின் உரிமை மற்றும் அவர்களின் பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்களில் ஐ.நா. மிகவும் அவதானத்துடன் செயற்படுகின்றது. இந்நிலையில் ஆப்கானிஸ்தானில் நிலவும் சூழ்நிலையை சமாளிக்க ஒரே வழி சமூகத்தின் அனைத்துத் துறைகளிலும் பெண்களின் முழுப் பங்களிப்பு அவசியம் என அலிசன் டேவிடியன் தெரிவித்துள்ளார்.



## பிரித்தானியாவில் கொரோனா உச்சம்

ஜூலை நடுப்பகுதிக்குபின்னர் மீண்டும் கொரோனா தொற்று நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில் எதிர்வரும் மாதங்கள் சவாலானவை என பிரித்தானிய அரசாங்கம் எச்சரித்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை பிரித்தானியாவில் 49 ஆயிரத்து 156 புதிய நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு மேலும் 45 இறப்புகள் பதிவாகியுள்ளன.

இந்நிலைமை தொடர்ந்தால் என்.ஹெச்.எஸ். கடுமையான அழுத்தத்தை எதிர்கொள்ள நேரிடும் என அரசாங்க ஆலோசகர் பேராசிரியர் அண்ட்ரூ ஹேவர்ட் தெரிவித்துள்ளார்.

இருப்பினும் தற்போது குளிர்காலம் என்பதனால் நோயாளிகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்படுகிறது என டவுனிங் ஸ்ட்ரீட் தெரிவித்துள்ளது.

MIGRATE TO AUSTRALIA

Engineering Degree Holders: Civil, Mechanical, Aeronautical, Chemical, Telecommunication, Electrical & Electronics, Land Surveyor, Quantity Surveyors

Diploma Holders (HNDE, NDT, NDES, C+G Advanced Diploma, OUSL Diploma in Technologist): Civil Engineering Associates, Mechanical Engineering Associates, Telecommunications Engineering Associates

Certificate Holders (CGTTI, AETI, ATI, Jaffna Technical College, C+G Technician Diploma or 5 years Work experience with evidence): Motor / Diesel Mechanics, Auto Electricians, Machinists, Fitters, Welders, Carpenter, Chef, Cook

Requirements: Age below 35 + Work experience


AUSTRALIAN STUDENT VISA FOR REGISTERED NURSES

Diploma/ BSc Nursing qualified nurses with Nursing Council Registration

Minimum 1 year experience and IELTS 6.5 with Sufficient Funds

Contact us:

Australian Migration Consultants
411/2, George R De Silva Mw,
Colombo 13
0112437285,
Email: sl.austvisa@gmail.com
HOTLINE: 0766228891



Australian Skilled - Recognised Graduate visa for Engineers

Civil, Mechanical, Electrical, Telecommunication, Chemical Engineers

(Graduated within the last 2 years)
18 months visa to work in any states and cities in Australia

Requirements:
- ✓ Age – below 31
- ✓ BSc.Engg from University of Moratuwa, University of Peradeniya, University of Jaffna, and University of Ruhuna
- ✓ IELTS overall 6

BOOK FREE CONSULTANT ADVICE FOR:
Student Visa / Partner Migration Visa / Parents Visa / Business Visa / Visitor Visa /
HOTLINE: 0766228891

0766228891
Contact us:
Australian Migration Consultants
41 1/2, George R De Silva Mw,
Colombo 13
0112437285, Email: sl.austvisa@gmail.com



Jaffna College Institute of Technology
Calls for the following courses

Computer Certificate Courses ( 3 – 4 months Part time)

- Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer – (PageMaker,PhotoShop & CorelDraw)
- Computer Hardware Technician
- Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
- Java, C++ Programming

Commencement in November 2021
At Our Jaffna Centre along
(Jaffna College Undergraduate dept. Building)
464 Hospital Road
Jaffna.
For further details contact
Tel no: 0212250975/0212223382
Email: ejcit@sltnet.lk.

# 'ஜோசப் விஜய் எனும் நான்' என ரசிகர்கள் ஒட்டியுள்ள சுவரொட்டிகள் ஊரக உள்ளாட்சித் தேர்தல் வெற்றியையடுத்து மதுரையில் பரபரப்பு




'2021 உள்ளாட்சியில் நல்ல தேர்வு – நீங்கள்தான் தமிழகத்தின் இறுதித் தீர்வு!' என நடிகர் விஜயை முதல்வராகச் சித்தரித்து ரசிகர்கள் ஒட்டியுள்ள சுவரொட்டிகளால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

தமிழகத்தில் நடந்து முடிந்த ஊரக உள்ளாட்சித் தேர்தலில் விஜய் மக்கள் இயக்கத்தின் ஆதரவுடன் முதன் முதலாக கட்சி சார்பு இல்லாத ரசிகர்கள், ஊராட்சிமன்றத் தலைவர் மற்றும் கிராம ஊராட்சி வார்ட் உறுப்பினர் பதவிகளுக்கு மொத்தம் 169 இடங்களில் போட்டியிட்டனர். அதில், போட்டியின்றி 13 பேரும் போட்டியிட்டு 102 பேருமாக மொத்தம் 115 பேர் வெற்றிபெற்றுள்ளனர்.

ஊரக உள்ளாட்சித் தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிட்ட பிரதான அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களே தோல்வியைத் தழுவியுள்ள நிலையில், அரசியலில் ஈடுபடாமல் உள்ள நடிகர் விஜயின் ரசிகர்கள் கணிசமான வெற்றியைப் பெற்றுள்ளமை அரசியல் கட்சிகளையே திகைப்பில் ஆழ்த்தியுள்ளது.

இந்த நிலையில் மதுரையில் உள்ள நடிகர் விஜயின் ரசிகர்கள் ஒட்டியுள்ள சுவரொட்டிகள் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

அந்த சுவரொட்டிகளில், நடிகர் விஜய் முதலமைச்சராகப் பதவியேற்பது போலச் சித்தரித்து, ஜோசப் விஜய் எனும் நான் உண்மையான நம்பிக்கையும், மாறாப் பற்றும் கொண்டிருப்பேன் என உறுதி கூறுகிறேன் என பதவிப் பிரமாணம் எடுப்பது போன்ற வாசகங்களையும், 2021 உள்ளாட்சியில் நல்ல தேர்வு நீங்கள்தான் தமிழகத்தின் இறுதித் தீர்வு எனவும் ரசிகர்கள் ஒட்டியுள்ள சுவரொட்டிகள் பலரதும் கவனத்தை ஈர்த்துவருகின்றன.

தனது அரசியல் நுழைவுக்கு இந்த ஊரக உள்ளாட்சித் தேர்தல் மூலம் ஆழம் பார்க்கிறார் விஜய் என அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்திருந்த நிலையில், ரசிகர்களின் சுவரொட்டிகள் எதிர்பார்ப்புகளை மேலும் அதிகரித்துள்ளன.

# பொய் வழக்குகளைக் கண்டு அ.தி.மு.கழகம் அஞ்சாது

## தமிழக எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பேச்சு!




தமிழஆத்தூர் அருகே நடைபெற்ற அ.தி.மு.க. பொன்விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்ட எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி நிர்வாகிகள் மீது போடப்படும் பொய் வழக்குகளை கண்டு அ.தி.மு.க. அஞ்சாது என பேசினார்.

அ.தி.மு.க வின் பொன்விழா ஆண்டையொட்டி தமிழகம் முழுவதும் உள்ள அக்கட்சி நிர்வாகிகள் பல்வேறு நிகழ்வுகளை ஏற்பாடு செய்து வருகின்றனர்.

சேலம் மாவட்டத்தின் ஆத்தூரிலுள்ள தலைவாசல் பேருந்து நிலையம் அருகே நடைபெற்ற பொன்விழாக் கொண்டாட்டத்தில் கலந்துகொண்ட எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆகியோரின்திருவுருவச்சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

அதன் பின்னர் அவர் அங்கு உரையாற்றியபோது, கொரோனா காலகட்டம் என்பதால் அ.தி.மு.க. சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற சட்டமன்ற உறுப்பினர்களால் வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்க நேரில் வர முடியவில்லை. சேலம் மாவட்டத்தில் உள்ள 11 சட்டமன்றத் தொகுதிகளில் 10 சட்டமன்றத் தொகுதிகளில் வெற்றியைப் பெற்றுத்தந்த பொதுமக்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அ.தி.மு.க வின் முன்னாள் அமைச்சர்கள் மற்றும் நிர்வாகிகள் மீது தி.மு.க. அரசால் பொய் வழக்குகள் போடப்படுகின்றன. இந்தப் பொய் வழக்குகளுக்கு எல்லாம் அ.தி.மு.க. அஞ்சாது. எம்.ஜி.ஆர். இருக்கின்றபோதும் எமது கட்சியினர் பல்வேறு சோதனைகளுக்கு உள்ளானார்கள். அதையெல்லாம் உடைத்தெறிந்து சாதனை படைத்த தலைவர் உருவாக்கிய கட்சி அ.தி.மு.க. என்று அவர் குறிப்பிட்டார்.

அண்மையில் நடைபெற்று முடிந்த 9 மாவட்ட ஊரக உள்ளாட்சித் தேர்தல் ஜனநாயக முறைப்படி நடைபெற்றதா? என கேள்வி எழுப்பிய அவர், அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஜனநாயக முறைப்படி தேர்தல் நடத்தியதாகவும் தற்போது நடைபெற்ற தேர்தலில் அ.தி.மு.க. சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்களையும் தோல்வியுற்றவர்களாக தி.மு.க வின் கைப்பாவையாக மாறியுள்ள தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது எனவும் அவர் விமர்சனங்களை முன்வைத்துள்ளார்.

# போலி மதிப்பெண் சான்றிதழ் தயாரித்த வழக்கில் பா.ஜ.க. எம்.எல்.ஏ.க்கு 5 ஆண்டு சிறைத்தண்டனை



உத்தரப்பிரதேச மாநிலம் அயோத்தியில் உள்ள கோசைகஞ்ச் தொகுதியின் பா.ஜ.கட்சி எம்.எல்.ஏ.யான இந்திர பிரதாப் திவாரிக்கு, கல்லூரியில் அனுமதி பெற போலி மதிப்பெண் சான்றிதழைப் பயன்படுத்திய வழக்கில் 5 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. எம்.பி, எம்.எல்.ஏக்களுக்கான சிறப்பு நீதிமன்றத்தில் நீதிபதி பூஜா சிங் வழங்கிய தீர்ப்பின்படி, திவாரி சிறைக்கு அனுப்பப்பட்டார். அவருக்கு ரூபா 8,000 அபராதமும் விதிக்கப்பட்டது.

1992 இல் திவாரிக்கு எதிராக அயோத்தியில் உள்ள சாகேத் கல்லூரியின் சார்பில் ராம ஜன்மபூமி காவல் நிலையத்தில் இந்த வழக்குப் பதிவு செய்யப்பட்டது. முதல் தகவல் அறிக்கையின்படி, பட்டப்படிப்பின் இரண்டாம் ஆண்டில் தோல்வியடைந்த திவாரி, 1990 இல் போலி மதிப்பெண் சான்றிதழைச் சமர்ப்பித்து அடுத்த வகுப்பில் சேர்ந்திருக்கிறார். இதைக் கண்டறிந்த கல்லூரி நிர்வாகம் அவர்மீது வழக்கைப் பதிவு செய்திருந்தது.

இந்த வழக்கில் 13 ஆண்டுகளுக்கு பிறகே குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு, 28 ஆண்டுகள் கழித்து தற்போது தீர்ப்பு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# உத்தரப்பிரதேச சட்டசபைத் தேர்தலில் பெண்களுக்கு 40 வீத வாய்ப்பு வழங்குவதாக பிரியங்கா காந்தி உறுதி

பா.ஜ.க. ஆட்சி நடைபெற்று வரும் உத்தரப்பிரதேசத்தில் அடுத்தாண்டு சட்டமன்றத் தேர்தல் நடைபெற உள்ளது. அந்த சட்டப்பேரவைத் தேர்தலில் 40 சதவீத தொகுதிகளில் பெண்கள் போட்டியிடுவதற்கு வாய்ப்பளிக்க காங்கிரஸ் முடிவு செய்துள்ளதாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி தெரிவித்துள்ளார்.

பா.ஜ.க. ஆட்சி நடைபெற்றுவரும் உத்தரப்பிரதேசத்தில் இந்தத் தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சியைக் கைப்பற்ற காங்கிரஸ் கட்சி தற்போதே வியூகம் வகுத்து வருகிறது. அதன் ஒரு திட்டமாக பெண்களை ஈர்ப்பதற்காக பிரியங்கா காந்தி இந்த அறிவிப்பை விடுத்துள்ளனர் எனத் தெரிகிறது.

காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர்களில் ஒருவரான பிரியங்கா காந்தி, செய்தியாளர்களுக்குப் பேட்டி அளிக்கையில், உத்தரப் பிரதேச சட்டப்பேரவைத் தேர்தலில் மொத்தமுள்ள 400 தொகுதிகளில் 40 சதவீத இடங்களில் பெண்கள் போட்டியிட வாய்ப்பளிக்க காங்கிரஸ் கட்சி முடிவு செய்துள்ளது, என்ற தகவலை உத்தியோகபூர்வமாகவெளியிட்டுள்ளார்.

# பயிர்களின் களைகொல்லிக்கு சிறுநீரையா பாவிப்பது?

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் கேள்வி



சேதனப் பசளை என்ற மாயை தற்போதைய அரசாங்கத்தினால் புகுத்தப்பட்டுள்ளது. அப்படியாயின் களைகொல்லிக்கு சிறுநீரையா பாவிப்பது? சேதனப் பசளை மூலம் விவசாயிகளுக்கு ஏற்படப் போகும் நஷ்டத்திற்கு நட்டஈடு வழங்கும் முன்மொழிவையும் எதிர்வரும் வரவு செலவுத் திட்ட அறிக்கையில் இணைத்துக் கொள்ளுங்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார். வெல்லாவெளியில் இடம்பெற்ற விவசாயிகளின் பிரச்சினைகளுக்கான தீர்வு கோரிய போராட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

மட்டக்களப்பு விவசாயிகளினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்தப் போராட்டத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நாங்கள் ஆதரவு தெரிவித்துக் கொண்டிருக்கின்றோம். உண்மையில் இதன் முக்கிய காரணம் என்னவென்றால். சேதனப்பசளை என்ற மாயை தற்போதைய அரசாங்கத்தினால் புகுத்தப்பட்டுள்ளது.

உலகத்திலே எந்த நாட்டிலும் சேதனப் பசளையை முழுமையாகப் பாவித்து பயன்பெற்ற நாடு என்று எதுவும் இல்லை. சவால் விடுகின்றேன், எந்த நாட்டில் சேதனப் பசளை முழுமையாகப் பாவித்து விளைச்சலை அதிகரித்திருக்கின்றார்கள் என்று முடியுமானால் கூறட்டும்.

கடந்த வருடம் நேபாளத்தில் முழுமையாகச் சேதனப் பசளை பாவிக்க வேண்டும் என்று கூறப்பட்டாலும் கூட மக்களின் எழுச்சி காரணமாகவும், ஆய்வுகளின் காரணமாகவும் 2035ம் ஆண்டு வரை அதனைப் பிற்போட்டிருக்கின்றார்கள். ஆனால் நம் நாட்டில் சேதனப் பசளை மாயையைக் கூறிக்கொண்டு எங்கள் விவசாயிகளை நஷ்டத்திற்குள் தள்ளும் செயற்பாடாகவே நாங்கள் இதனைப் பார்க்கின்றோம்.

மட்டக்களப்பு மாவட்டத்திலே தற்போது பெரும்போகச் செய்கை ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. அதன் விளைச்சல் குறையுமாக இருந்தால் விவசாய அமைச்சரும், அரசாங்கமும் பதில் கூற வேண்டும். இதற்கான நட்ட ஈடுகளை தற்போதே நீங்கள் தயாராக வைத்துக் கொள்ளுங்கள். ஏனெனில் சேதனப் பசளை பாவித்து ஒரு ஏக்கருக்கு நாலில் ஒரு பங்கு விளைச்சலையே பெற முடியும்.

சேதனப் பசளை விடயத்தை நாங்கள் ஏற்றுக் கொள்கின்றோம். ஆனால் ஒரு திட்டமிடல் இல்லாமல் திடீரென செய்யச் சொன்னால் விவசாயிகள் என்ன செய்ய முடியும். இன்று இலங்கையில் பல இடங்களில் யூரியா பசளை அடுக்கி வைத்திருக்கின்றார்கள். அது யாருக்கு விற்பதற்காக வைக்கப்பட்டிருக்கின்றது. எனவே படிப்படியாக இதனை மாற்ற வேண்டுமே தவிர திடீரென இராணுவ நடவடிக்கை மூலம் செயற்படுத்துங்கள் என்று சொல்வதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது என்றார்.



# மட்டக்களப்பு வாழைச்சேனையில் தீப்பிடித்து எரிந்த முச்சக்கரவண்டி

மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதேசத்தில் வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டி ஒன்றுக்கு இன்று (20) அதிகாலை தீ வைக்கப்பட்டதை அடுத்து முச்சக்கரவண்டி முற்றாக எரிந்து சேதமடைந்துள்ளதுடன் வீட்டின் ஒருபகுதியும் சேதமடைந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை வீட்டின் முன்பகுதி சுவரில் ஒட்டப்பட்டிருந்த கடிதம் ஒன்றை பொலிஸார் மீட்டுள்ளதுடன். இது இரு குடும்பங்களுக் குள்ளே ஏற்பட்ட சண்டை காரணமாக இச்சம்பவம் இடம்பெற்று இருக்கலாம் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைகுண்டுடன் ஒருவர் கைது

திருகோணமலை கிண்ணியாவில் வெளிநாட்டுத் தயாரிப்பு கைகுண்டுடன் ஓய்வு பெற்ற இராணுவ பொறியியலாளர் ஒருவர் நேற்று இரவு கைது செய்யப்பட்டுள்ளார்

கிண்ணியா பூவரசாந்தீவு, ஆர்.டி.எஸ்.தெருவில் வசிக்கும் 29 வயதுடைய இலங்கை இராணுவத்தின் ஓய்வுபெற்ற இராணுவ பொறியியலாளரை சம்பவதினமான நேற்று இரவு கைது செய்தமையுடன் கைக்குண்டு ஒன்றையும் மீட்டனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன் கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# டெங்கு பரவலைக் கட்டுப்படுத்த முன்னாயத்த நடவடிக்கைகள்

## கல்முனையில் முன்னெடுப்பு

கொரோனாத் தொற்று நிலைக்கு மத்தியில் அம்பாறை மாவட்டத்தில் தற்போது இடைக்கிடையே மழை பெய்து வருவதால் டெங்கு நோய் பரவும் சாத்தியமுள்ளது. இதனை கட்டுப்படுத்தும் முகமாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை பிரிவில் உள்ள கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினால் டெங்கு நுளம்பு ஒழிப்பு முன்னாயத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதற்கமைய கல்முனை பிரதேச சுற்றுச் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ. ஆர். எம். அஸ்மி தலைமையில் செயலணியினர் இணைந்து குறித்த செயற்பாட்டை மேற்க்கொண்டனர்.

இதன் போது கடற்கரையோரத்தில் கவனிப்பாரற்று பராமரிப்பின்றி நிறுத்தி வைக்கப்பட்டுள்ள மீன்பிடி தோணியொன்றின் உள்ளே மழை நீர் தேங்கி உள்ளமை அவதானிக்கப்பட்ட நிலையில் நீரினை அகற்றும் செயற்பாடு முன்னெடுக்கப் பட்டதுடன் ,நிறுத்தி வைக்கப்பட்டுள்ள



சூழலில் இருந்து டெங்கு பரவலைக் கட்டுப்படுத்தும் முகமாக தீவிர சுகாதார நேரடி கண்காணிப்பு களவிஜயம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஜீ. சுகுணனின் வழிகாட்டலில், தோணிகளில் மழைநீர் தேங்கியுள்ளதா என அவதானிக்கப்பட்டது. அத்துடன் மீன்பிடி தோணி உரிமையாளர்களுக்கு சுகாதாரப் பிரிவினரால் டெங்கு நோய் பரவல் தொடர்பாக அறிவுறுத்தப்பட்டது.

# செட்டிபாளையத்தில் விபத்து



மட்டக்களப்பு செட்டிபாளையத்தில் இரவுவேளை இடம்பெற்ற விபத்து சம்பவத்தில் சிக்கி இளைஞன் ஒருவர் படுகாயமடைந்திருக்கிறார்என களுவாஞ்சிகுடி போக்குவரத்து பொலிஸார் தெரிவித்துள்ளனர். இச்சம்பவம் மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியின் செட்டிபாளையத்தில் நேற்று இரவு இடம்பெற்றுள்ளது.

மேலும் இவ்விபத்து சம்பவம் குறித்து தெரிய வருவதாவது,

மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியில் சென்று கொண்டிருந்த டிப்பர் ரக வாகனம் ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதியதால் இவ்விபத்து இடம்பெற்றிருப்பதாக தெரியவருகின்றது. இவ் விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் காயமடைந்த நிலையில், களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். விபத்து சம்பவம் குறித்து தகவலறிந்து விரைந்த களுவாஞ்சிகுடி போக்குவரத்து பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மே.இ. தீவுகள் உலகக் கிண்ண அணியில் மாற்றம் பபியன் அலனுக்குப் பதிலாக அகேல் ஹொசைன்



ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் விளையாடவுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணியில் காயமடைந்த பபியன் அலனுக்குப் பதிலாக அகேல் ஹொசைன் தேர்வாகியுள்ளார்.

ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் தற்போது தகுதிகாண் சுற்று ஆட்டங்கள் நடைபெற்றுவருகின்றன. தகுதிச்சுற்று ஆட்டங்கள் முடிந்தபிறகு அதிலிருந்து தேர்வாகும் 4 அணிகள், ஏற்கெனவே தேர்வான 8 அணிகளுடன் இணைந்து பிரதான சுற்றான சூப்பர் 12 இல் ஒக்டோபர் 23 முதல் போட்டியிடவுள்ளன.

இந்தத் தொடருக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணியில் இடம்பெற்றிருந்த பபியன் அலன் காயம் காரணமாக விலக வேண்டிய நிலை ஏற்பட, இடதுகை சுழற்பந்து வீச்சாளர் அகேல் ஹொசைன் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மாற்று வீரராக மேற்கிந்தியத் தீவுகள் அணியில் இடம்பெற்றிருந்த அகேல் ஹொசைன், 9 ஒருநாள், 6 ரி-20 ஆட்டங்களில் விளையாடியுள்ளார்.

அகேல் ஹொசைன் பிரதான அணிக்குள் உள்வாங்கப்பட்டதால், அவரது இடத்துக்கு மாற்று வீரராக 26 வயது குடகேஷ் மோட்டீ அணிக்கு அழைக்கப்பட்டுள்ளார். ஐக்கிய அரபு இராச்சியத்தில் 6 நாள்கள் தனிமைப்படுத்தலுக்குப் பின்னர் அவர் அணியோடு இணைந்துகொள்வார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பபியன் அலனுடைய விலகல் குறித்து கருத்துத் தெரிவித்த மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தலைமைத் தேர்வாளர் ரோஜர் ஹாப்பர், உலகக் கிண்ணத் தொடரில் விளையாடும் பெரும் எதிர்பார்ப்போடு இருந்த அலனுக்கு இது ஏமாற்றத்தை அளித்திருக்கும். அவரது சகலதுறை ஆட்டப் பங்களிப்பை எமது அணி இழப்பது பின்னடைவுதான். விரைவில் அவர் குணமடைந்து அடுத்து நடக்கவிருக்கும் தொடர்களில் அணியோடு இணைவார் என்று எதிர்பார்க்கிறேன் எனக் குறிப்பிட்டிருக்கிறார்.

சூப்பர் 12 சுற்றின் ஆரம்ப நாளான ஒக்டோபர் 23 அன்று மேற்கிந்தியத் தீவுகள் அணி இங்கிலாந்து அணியை எதிர்கொள்ளவுள்ளது.




# அடுத்த சுற்றுக்குத் தெரிவாகும் வாய்ப்பை தக்கவைத்துக்கொண்டது பங்களாதேஷ்

ரி-20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் தகுதிகாண் சுற்றின் நேற்றைய போட்டியில் ஓமான் அணியை 26 ஓட்டங்களால் வீழ்த்திய பங்களாதேஷ் அணி அடுத்த சுற்றுக்குத் தெரிவாகுவதற்கான வாய்ப்பைத் தக்கவைத்துள்ளது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 20 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 153 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. மொகமட் நயிம் 64, சகிப் அல் ஹசன் 42 ஓட்டங்களை எடுத்திருந்தனர். ஓமான் அணியின் பிலால் கானும் பயாஸ் பட்டும் தலா 3 விக்கெட்டுக்களையும், கலீமுல்லா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். அடுத்ததாக வெற்றியிலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய ஓமான் அணியால் 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 127 ஓட்டங்களைமாத்திரமே பெறமுடிந்தது. இந்தப் போட்டியின் ஆட்ட நாயகனாக சகிப் அல் ஹசன் தெரிவானார்.

இந்தப் போட்டியில் 26 ஓட்டங்களால் ஓமான் அணி தோல்வியைச் சந்தித்தபோதிலும் ஓட்ட சராசரியின் அடிப்படையில் ‘பி’ பிரிவில் புள்ளிப் பட்டியலில் பங்களாதேஷ் அணியை விட ஓரிடம் முன்னதாக இரண்டாவது இடத்தை தக்கவைத்துள்ளது. இதேவேளை ‘பி’ பிரிவில் தான் விளையாடிய இரண்டு போட்டியிலும் வெற்றிபெற்றுள்ள ஸ்கொட்லாந்து அணி 4 புள்ளிகளுடன் முதலாவது இடத்தில் உள்ளது.

# சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து பிரபல ஆஸ்திரேலிய வீரர் ஓய்வு

சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுகிறேன் என ஆஸ்திரேலிய கிரிக்கெட் வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் பட்டின்சன் அறிவித்துள்ளார்

31 வயது பட்டின்சன், 21 டெஸ்டுகள், 15 ஒருநாள், 4 ரி-20 போட்டிகளில் விளையாடியுள்ளார். இறுதியாக 2020 இல் நியூசிலாந்துக்கு எதிராக டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் அவர் விளையாடியிருந்தார்.



விரைவில் நடைபெறவுள்ள ஆஸ் தொடருக்கான ஆஸ்திரேலிய அணியில் தனக்கு இடம் கிடைக்காது என்பதால் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுகிறேன் என பட்டின்சன் அறிவித்துள்ளார். காயம் காரணமாக சமீபகாலமாக உள்ளூர் போட்டிகளில் விளையாடாததால் ஆஸ் தொடரில் வாய்ப்பு கிடைக்காத சூழலில் இம்முடிவை அவர் எடுத்துள்ளார்.

இன்னும் நான் கைந்து வருடங்கள் தன்னால் கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்க முடியும் என்பதால், உள்ளூர் போட்டிகளிலும் கவுன்டி கிரிக்கெட்டிலும் விளையாடவுள்ளேன் என பட்டின்சன் கூறியுள்ளார்.

21 டெஸ்ட் போட்டிகளில் அவர் 81 விக்கெட்டுக்களை எடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



# பப்புவா நியூகினியாவை வென்றது ஸ்கொட்லாந்து ‘பி’ பிரிவில் பட்டியலில் முதலிடத்தைத் தக்கவைத்தது

*உலகக்கிண்ணரி-20கிரிக்கெட் தொடரின் முதல் சுற்றின் ஐந்தாவது போட்டியில் பப்புவா நியூகினியா அணியை ஸ்கொட்லாந்து அணி 17 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.*

*நேற்று நடைபெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஸ்கொட்லாந்து அணி முதலில் துடுப்பாடத் தீர்மானித்து, 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 165 ஓட்டங்களை எடுத்தது. ரிச்சி பெரிங்டொன் 70, மத்யு க்ரோஸ் 45 ஓட்டங்களையும் சேர்த்தனர். இந்த போட்டியில் பப்புவா நியூகினியா அணியின் கபுவா மொரெயா இறுதி ஓவரின் இறுதி மூன்று பந்துகளில் 3 விக்கெட்டுக்களை தொடர்ச்சியாக வீழ்த்தி ஹட்ரிக் சாதனையை நிகழ்த்தினார்.*

*இவர்மொத்தமாக4விக்கெட்டுக்களையும் சாட் சோபெர் 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். இதனை அடுத்து வெற்றியிலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய பப்புவா நியூகினியா அணி 19.3 ஓவர்களில் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 148 ஓட்டங்களை மாத்திரமே பெற்று தோல்வியடைந்தது. நோர்மன் வனுவா 47 ஓட்டங்களை எடுத்தார். ஸ்கொட்லாந்து அணியின் ஜோஸ் டாவி 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இந்தப் போட்டியின் ஆட்ட நாயகன் விருது ஸ்கொட்லாந்து அணியின் ரிச்சி பெரிங்டொனுக்கு வழங்கப்பட்டது.*

# நம்பிக்கைக்கு உரியவர் அல்லர் சாணக்கியன்!

## டக்ளஸ் சாட்டை



தமிழ் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் நம்பிக்கையில் லாத ஒருவர் என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரி விக்கும்போதே மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

இந்தியக் கடற்றொழிலாளர் களால் மேற்கொள்ளப்படுகின்ற எல்லை தாண்டிய அத்துமீறிய சட்ட விரோத தொழில்முறைக்கு எதிராக 2017 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இழுவைவலை தடைச் சட்டம் பயன்படுத்தப் படாமையாலேயே இந்தியக் கடற்றொழிலாளர் அதிகளவில் எல்லை தாண்டி வருகின்றனர் எனக் குற்றஞ்சாட்டப்படுகிறது. இதுதொடர்பாக ஊடகவிய லாளர்களின் கேள்விக்குப் பதி லளித்த கடற்றொழில் அமைச்சர்–

மேற்படி சட்டத்தை உருவாக் கியபோது, மூன்றிலிரண்டு பெரும்பான்மையை பெற்றுக் கொள்வதற்காக ஈ.பி.டி.பி. கட்சி யும் ஆதரவளித்திருந்தமையை சுட்டிக்காட்டினார்.

மேலும், தம் மால் உருவாக்கப் பட்ட ஆட்சிக் காலத்தில் இந்தச் சட்டம் இயற்றப் பட்டதாக தெரிவிக் கின்ற நாடாளு மன்ற உறுப்பினர் சுமந்திரன் போன்றவர்கள், தமது ஆட்சிக் காலத்தில் இந்தியக் கடற்றொ ழிலாளர்களுக்கு எதிராக மேற்படி சட்டத்தைப் பிரயோகிக்க வில்லை எனவும் தெரிவித்தார்.

2017 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் இழுவை வலைச் சட்டம் உருவாக்கப்பட்ட பின்னர் சுமார் 100 இற்கும் மேற்பட்ட இந்திய மீன்பிடிப் படகுகள் கைப்பற்றப்பட்ட போதிலும், அவைக்கு எதிராக இழுவை வலைத் தடைச் சட்டம் பயன் படுத்தப்படவில்லை எனவும் குற்றஞ்சாட்டினார்.

எனினும், தற்போது குறித்த சட்டங்களின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட் டுள்ளன எனத் தெரிவித்த அமைச் சர் டக்ளஸ் தேவானந்தா, அண் மையில், தமிழரசுக் கட்சியை சேர்ந்த நாடாளுமன்ற உறுப் பினர்கள் சிலரும் அவர்களின் ஆதரவாளர்களும் இணைந்து முல்லைத்தீவில் இருந்து பருத்தித் துறை வரை மேற்கொண்ட கடற் பயணம் தொடர்பாக அலட்டிக் கொள்ளவில்லை எனவும் அது தோல்வியில் முடிவடைந்தி ருப்பதாகவும் தெரிவித்துள் ளார்.

அத்தோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் ஒரு நம்பிக்கை அற்றவர் எனவும் அவர் கடந்த காலங்களில் எங்கு இருந்தார், தற்போது எங்கு இருக்கிறார், நாளை எங்கு செல்வார் என்பது அனைவருக்குத் தெரியும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

# விவசாயிகள் போராட்டங்களின் பின்னணியில் சுதந்திரக்கட்சி

விவசாயிகளால் மேற் கொள்ளப்பட்டுவரும் போராட்டங் களின் பின்னணியில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இருப்பதாக இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

திம்புலாகல பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்றதன் பின்னர் ஊடகவிய லாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் –

விவசாயிகளின் போராட்டங் களின் பின்னணியில் சுதந்திரக் கட்சியே செயற்படுகின்றது. தயவு செய்து உடலில் இருந்துகொண்டு காதை சாப்பிடும் செயலை செய்ய வேண்டாம் என கேட்டுக்கொள் கின்றேன்.

சேதன பசளையைப் பயன் படுத்தி ஒரு போகமேனும் விவசாயம் செய்ய வேண்டும். ஏதேனும் ஒரு காரணத்தால் விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டால் விவசாயிகளுடன் இணைந்து நானும் வீதியில் இறங்கிப் போராடுவேன்.

விவசாயிகள் ஐம்பது வீதம் சேதன பசளையைக் கோருகின்ற னர். இதன் மூலம் அரசாங்கத்தி னதும், ஜனாதிபதியினதும் சேதன பசளை திட்டம் வெற்றியடைந் துள்ளமை அம்பலமாகின்றது. எனவே ஒன்றிரண்டு போகங்கள் சேதன உரத்தைப் பயன்படுத்தி நெற்செய்கையில் ஈடுபடுமாறு கோருகிறேன் என ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

# அடிதடியில் முடிவுற்றது அபிவிருத்திக் குழு கூட்டம்

நுவரெலியா – கொத்மலை, கெட்டபுலாவ பிரதேச அபிவிருத்தி அதிகாரிகள் காரியாலயத்தில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றின் போது நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் பிரதேச சபை உறுப்பினர் ஆகியோருக்கு இடையில் கைகலப்பு ஏற்பட்டுள்ளது.

கொத்மலை பிரதேச அபிவிருத்தி குழுவின் தலைவர், ஸ்ரீலங்கா சுதந்திர பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் ஜயதிஸ்ஸ மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பிரதேச சபை உறுப்பினர் சுபாசித த சில்வா ஆகியோருக்கும் இடையிலேயே இவ்வாறு பிரச்சினை ஏற்பட்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சம்பவத்தில் காயமடைந்த ஸ்ரீலங்கா சுதந்திர பெரமுனவின் ஆதரவாளர் ஒருவர் நாவலபிட்டிய வைத்தியசாலையில் சேர்க்;கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக இரு தரப்பினரும் நாவலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதோடு, சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை நாவலப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இந்திய தமிழ்நாட்டுத் தமிழர்களுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்துக்கு எதிர்ப்பு!

## காணாமலாக்கப்பட்டோர் சங்க செயலர் தெரிவிப்பு




தமிழ்நாட்டுத் தமிழர்களுக்கு எதிரான எந்த ஆர்ப்பாட்டத்தையும் நாங்கள் எதிர்க்கின்றோம் என தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் செயலாளர் கோ.ராஜ்குமார் தெரிவித்தார்.

வவுனியாவில் காணாமல் போன உறவினர்களால் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நிமலராஜ னின் 21 ஆவது ஆண்டு நினைவு நாளான நேற்று (செவ்வாய்க்கிழமை) தொடர் போராட்டம் மேற்கொள்ளும் போராட்ட பந்தலில் அஞ்சலி செலுத்திவிட்டு ஊடகங்க ளுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் –

நிமலராஜனை வணங்குகிறோம், சுமந்திரனை நிராகரிக்கிறோம்.

காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் குழந்தைகளைக் கண்டுபிடிப்பதற்கான 7706 ஆவது நாள் போராட்டம் இன்றும் தொடர்கிறது. தமிழ் பத்திரிகையாளர் நிமலராஜ னின் 21 ஆவது ஆண்டு படுகொலை நினைவு நாள் இன்று. நிமலராஜன் படுகொலை தமிழ் ஜனநாயகத்தைக் கொன்றது. தமிழரின் ஜனநாயகம் தமிழ்தேசியத்தை உயிர் மூச்சாகக் கொண்டது.

இலங்கை ஜனநாயகம் என்பது சிங்களவரின் ஜனநாயகம், அது தமிழர்களை ஒடுக்குவதற்கு மாத்திரமே. தமிழர்களின் ஜனநாயகம் என்பது, பாதுகாப்பான, பாதுகாக்கப்பட்ட தமிழர் தாயகம் வரும் போது தான் தமிழர் ஜன நாயகத்துக்கு உயிர் வரும்.

நிமலராஜன் உயிருடன் இருந்திருந்தால், சுமந்திரனின் சதி முடிச்சுக்களை தனது பலம் வாய்ந்த எழுத்துக்களால் அவிழ்த்து அம்பலப்படுத்தியிருப்பார். ஊழல் செய் யப்பட்ட தமிழ் எம்.பிக்கள் பதவியில் இருக்கும்வரை, தமிழர்கள் தங்கள் அரசியல் தீர்வைப் பெற முடியாது.

இன்னும் மோசமான விடயம் என்ன வென்றால், பணம் பெறும் பெரும்பாலான தமிழ் எம்.பிக்கள் ஊமையாக இருப்பது . இது ஒட்டுமொத்த தமிழ் தலைமுறையையும் சிங்களவர்களின் அடிமைகளாக மாற்றும்.




சிவாஜிலிங்கத்தின் ஒரு சில கொள்கையுடன் நாங்கள் ஒத்துப்போகவில்லை. ஆனால் ஊழல் சுமந்திரனால் சிவாஜிக்கு எதிராக வழக்கு பதிவு செய்ய சிவாஜி விடுத்த கோரிக்கையை வரவேற்கிறோம்.

சுமந்திரன் தனது ஊழல் நடவடிக்கைகளை கேட்ட போது அனைவரையும் அச்சுறுத்தினார், ஆனால் சுமந்திரன், சிவாஜிலிங்கம் மீது அவதூறு வழக்கு தொடர மறுக்கிறார். அவர் ஒரு வழக்கைத் தாக்கல் செய்யத் தவறினால், சிவாஜிலிங்கம் ஊடகங்களுக்கு சொன்ன ஊழல் குற்றச்சாட்டை சுமந்திரன் ஏற்றுக் கொள்கிறார்.

சுமந்திரன் இந்த ஊழல் குற்றச்சாட்டை மறைக்க, அவர் வயலை உழத் தொடங்கினார், பின்னர் படகோட்டம் மற்றும் உரத்தைப் பற்றி பேசினார். தமிழ்நாடு தமிழர்களுக்கு எதிரான எந்த ஆர்ப்பாட்டத்தையும் நாங்கள் எதிர்க்கிறோம். ஜே.ஆர். ஜெயவர்த்தன தமிழர் தாயகத்தை முற்றுகையிட்டபோது அவர்கள்தான் 1987 இல் தமிழர்களுக்கு உணவு மற்றும் மருந்தைக் கொண்டு வந்தனர்.

ஈழத்துக்கும் தமிழகத்துக்கும் இடையிலான பிணைப்பை முறிப்பதற்கு சுமந்திரனின் சதி இது. போரின் போது, தமிழ் மீனவர்கள் எங்களுக்கு மருந்து, எரிபொருள், உணவு, உடைகள் மற்றும் பிற அத்தியாவசிய பொருள்க ளைக் கொண்டு வந்து உதவினர் . ஈழத் தமிழர்களாகிய நாம் அவர்கள் செய்ததை மறக்கக் கூடாது. தமிழக மீனவர்களுக்கு எதிராக யாரேனும் ஆர்ப் பாட்டம் செய்தால் கண்டிக்க வேண்டும்.

நாங்கள் தெற்கே மீன்பிடிக்க செல் லாததால் முதலில் சிங்கள மீனவர்கள் எங்கள் பகுதியில் மீன் பிடிப்பதைத் எதிர்க்கிறோம்.

பாதுகாப்பான, பாதுகாக்கப்பட்ட, மீளப்பெற முடியாத தமிழர் தாயகம் கிடைத்தவுடன், தமிழக மீனவர்களுடன் நாங்கள் சுமுகமான தீர்வுக்கு வருவோம்.

நமது வடக்கு மற்றும் கிழக்கை ஒட்டு மொத்தமாக தமிழ்நாடு கடல் கடற்கரை யுடன் எங்கள் பொதுவான மீன்பிடி பகுதி யாக கூட இருக்கலாம். ஈழத் தமிழர்களையும் தமிழ்நாட்டுத் தமிழர் ஒற்றுமையையும் அழிக்க சுமந்திரன் கொழும்பு சிங்களவர் களை சமாதானப்படுத்த கடலில் படகை ஓட்டினார்.

தமிழர்களின் விடுதலைக்கான கொள்கையில் சுமந்திரன் இல்லை என்பதில் தமிழர்கள் கவனமாக இருக்க வேண்டும். கொழும்பு பணத்தில் தமிழர்களை வாங்க, சிங்கள தலைமைக்கும் தமிழ் அரசியல்வாதி களுக்கும் இடையில் தரகராக அவர் செயல்படுகிறார்.
– என்றார்.